# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜனவரி 10, 2026 Weekly E-paper ● January 10, 2026





# உயிர்கொடுத்து மொழிகாத்த வரலாறு! இன்று மீண்டும் ‘பராசக்தி’

நெல்லை பாபு

## அரசுப்பணியாளர்களை அரவணைக்கும் தி.மு.கழக அரசு!

இல.ரவி

## வந்தார்... சென்றார்... அமித்ஷா!

தலையங்கம்

## இயக்கச் செய்திகள்

நெல்லை பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஜனவரி 10, 2026

Weekly E-paper ● January 10, 2026


# உயிர்கொடுத்து மொழிகாத்த வரலாறு! இன்று மீண்டும் 'பராசக்தி'

**நெல்லை பாபு**

1952-ல் ஒரு 'பராசக்தி' வந்து தமிழ்நாட்டின் சமூகக் கட்டமைப்பையே கேள்வி கேட்டு உலுக்கியது. இதோ, 70 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒரு 'பராசக்தி' வெளியாகவுள்ள நிலையில் அதன் ட்ரைலர் தற்போது சோசியல் மீடியாவில் வைரலாகியுள்ளது.

சுதா கொங்கராவின் இயக்கத்தில், 1965-களின் காலக்கட்டத்தைக் கண்முன் நிறுத்தும் ட்ரைலர், நம் நரம்புகளில் தமிழ் உணர்வை பாய்ச்சுகிறது.

"நாங்கள் இந்திக்கு எதிரானவர்கள் அல்ல, இந்தித் திணிப்பிற்குத்தான் எதிரானவர்கள்" என்ற அந்த ஒற்றை வசனம், திராவிட இயக்கம் காலம் காலமாக முன்வைக்கும் தெளிவான அரசியலைப் பறைசாற்றுகிறது.

இந்தத் திரைப்படம் வெறும் கற்பனையல்ல, நம் முன்னோர்கள் சிந்திய ரத்தத்தின் வரலாறு.

1965 ஜனவரி 26 அன்று இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டம் அமலுக்கு வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகமும், மாணவர் சமூகமும் கிளர்ந்தெழுந்த அந்த வீரம் செறிந்த நாட்கள் ட்ரைலரில் தத்ரூபமாகப் பதிவாகியுள்ளன. தாளமுத்து, நடராசன் தொடங்கி கீழப்பழுவூர் சின்னசாமி வரை, 'தமிழ் வாழ்க' என்று முழக்கமிட்டுத் தீக்கிரையான அந்த வீரத் தியாகிகளின் வலியை இந்தப்புதிய 'பராசக்தி' மீண்டும் நினைவூட்டுகிறது.

ரயில் மறியல்கள், தடியடிகள், துப்பாக்கிச் சூடுகள் என ஒரு மாநிலமே போர்க்களமாக மாறிய அந்த வரலாற்றுச் சூழலை, இன்றைய தலைமுறைக்குச் சொல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்.

அன்று பேரறிஞர் அண்ணா தொடங்கி வைத்த அறப்போர், தலைவர் கலைஞர் போன்ற தலைவர்களின் வழிகாட்டுதல் என திராவிட இயக்கம் இந்த மண்ணில் மொழிப்பற்றை ஒரு அரசியல் கொள்கையாக மாற்றியது.





1965-ல் இந்தி திணிப்பிற்கு எதிராகத் தமிழகம் கிளர்ந்தெழுந்தபோது, திராவிட இயக்கத்தின் மாணவர் படைதான் முன்னணியில் நின்றது.

ஒரு தலைமுறையே "இந்தித் திணிப்பை" எதிர்த்துச் சிறை சென்றது. கீழப்பழுவூர் சின்னசாமி போன்ற தியாகிகளின் வீர மரணம், இன்றும் நம் நரம்புகளில் தமிழ் உணர்வை ஏற்றுகிறது.

இன்று அந்த வரலாற்றை ஒரு கலைப்படைப்பாகப் பார்ப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. திராவிட இயக்கம் என்பது வெறும் அரசியல் அதிகாரம் மட்டுமல்ல; அது தமிழின் மானம் காக்கப் பிறந்த இயக்கம்.

பழைய 'பராசக்தி' சமூகச் சீர்திருத்தத்தைப் பேசியது என்றால், இந்தப் புதிய 'பராசக்தி' நம் மொழி உரிமையை மீட்டெடுத்த அந்த வரலாற்றுப் போராட்டத்தைப் பேசப்போகிறது.

"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்பது வெறும் வாசகமல்ல, அது நம் வாழ்வுரிமை. இன்றைய தலைமுறைக்கு நம் முன்னோர்கள் செய்த தியாகத்தைச் சொல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்."உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு!" என்ற முழக்கம் மீண்டும் திரையரங்குகளில் ஒலிக்கப் போகிறது!

அதிகாரத்தின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாத அந்த 'பராசக்தி'யை மீண்டும் திரையில் காணக் காத்திருப்போம்!



## அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டுப் பொங்கல் வாழ்த்துகள்!

# அரசுப்பணியாளர்களை அரவணைக்கும் தி.மு.கழக அரசு!

இல. ரவி. மாநிலத் தலைவர்,
பெஸ்ட் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் பேராசிரியர்கள் கூட்டமைப்பு

03.01.2026 அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு TAPS அறிவித்தார் முதல்வர். 01.04.2003 இல் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் CPS என்ற, ஓய்வூதியமே இல்லாத, ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா நடைமுறைப்படுத்தினார். அன்றைய காலகட்டத்தில் இதனை எதிர்த்த அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கூட்டமைப்பு, ஜாக்டோ ஜியோ போராட்டங்களை எஸ்மா, டெஸ்மா, பணி நீக்கம் போன்ற அடக்குமுறைகளைக் கொண்டு முடக்கியது.

மீண்டும் 2017 இல் லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் களம் கண்டபோது அன்றைய தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் ஓய்வூதியம் வழங்க 100% சாத்தியம் இல்லை என்றும், வெறும் கண் துடைப்பிற்கு ஓய்வூதிய குழுக்களை அமைத்து அக்குழு அறிக்கையே இதுவரை சமர்ப்பிக்காமல் விட்டது, அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் வாழ்வாதார கோரிக்கை, ஓய்வூதியம் கானல் நீராய் போனது.

இன்றைய முதல்வர் அவர்கள் மூத்த IAS அதிகாரி உயர்திரு ககன் தீப்சிங் பேடி தலைமையில் ஓய்வூதிய குழு அமைத்து அது, ஆறு மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பித்தது. 2026 புதிய ஆண்டின் தொடக்கத்தில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க ஆவண செய்து அதனை நடைமுறைப்படுத்திய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்திட்டத்தில் 50 சதவீத ஓய்வூதியம், 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை போன்ற பல்வேறு அம்சங்கள் கொண்டுள்ளதை வரவேற்கிறோம். ஊதியத்தில் ஊழியரின் பங்களிப்பு 10% ஓய்வு பெறும் போது திரும்பப் பெறும் வகையில் மாற்றத்தை கொண்டு வருவார் எனவும் நம்பிக்கை இருக்கிறது.

மேலும் தமிழ்நாடு ஓய்வூதிய குழு தலைவர் உயர்திரு ககன்தீப் சிங்பேடி IAS அவர்கள் தலைமையிலான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தோம். தமிழ்நாடு ஓய்வூதிய திட்டம் என்ற பெயரில் கூட அறிவிக்கலாம் என்ற கருத்தையும் முன்மொழிந்தோம்.

***படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்***
***உடையான் அரசருள் ஏறு.***

என்பதற்கு சான்றாக வையகமே போற்றும் தமிழகத்தில் ஆட்சியை சிறப்புற செய்து வரும் மாண்புமிகு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை நன்றி பாராட்டி வாழ்த்துகிறோம்.

தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நலனில் எப்போதும் திராவிட முன்னேற்றக் கழகம் அக்கரை காட்டும் என்பதற்கு சான்றுகள் பல உண்டு,

முழு ஓய்வூதியம் பெற 33 வயதை 30 வயதாகக் குறைத்தது,

இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தியது,

அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டங்களின் போது கொண்டுவரப்பட்ட டெஸ்மா (TESMA) மற்றும் எஸ்மா (ESMA) சட்டங்கள் நீக்கப்பட்டு, பறிக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் கழக ஆட்சியில் வழங்கப்பட்டன.

பத்தாண்டுகள் முடித்தால் தேர்வு நிலையும் (Selection Grade),

20 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு சிறப்பு நிலையும் (Special Grade) வழங்கி ஊதிய உயர்வும் வழங்கப்பட்டது.

பதவி உயர்வு இன்றி 30 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு ஒரு கூடுதல் ஊதிய உயர்வும் வழங்கப்பட்டது.

அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை, கருணைக்கொடை, 15 நாள் ஈட்டிய விடுப்பு அரசுக்கு சரண்டர் செய்து காசாக்கும் திட்டம் மேற்கண்டவை அனைத்தும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடுதான்.

உயர்கல்விக்கு ஊக்க ஊதிய உயர்வுகள், பண்டிகைக் கால முன்பணத்திற்கு வட்டியை ரத்து செய்தது.

2 லட்சத்துக்கும் மேற்பட்ட சத்துணவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டது.

36 மாதங்கள் கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்ததை 12 மாதங்களாகவும் பின்னர் 10 மாதங்கள் அல்லது கடைசி மாதத்தில் பெறும் சம்பளத்தில் 50% ஓய்வூதியம் என்பதைக் கொண்டு வந்தது,

45 ஆயிரம் ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில் இருந்த காலம் வரை ஊதியம் வழங்க நிரந்தரம் செய்யப்பட்டது.

நகர ஈட்டுபடி (City allowance), மலைப்பகுதியில் பணிபுரிபவர்களுக்கு குளிர்காலப்படியும் , மலைப்படியும் வழங்கப்பட்டது.

6 வது ஊதியக் குழுவில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு தமிழ்நாட்டில் கூடுதல் சலுகைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து ஊழியர்களுக்கும் அரசு ஊழியர்களைப் போல ஓய்வூதிய சலுகைகளை வழங்கியவர் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு எண்ணிலடங்கா சலுகைகளையும், திட்டங்களையும் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொடர்ந்து வழங்கி அவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு இருக்கிறது. தொடர்ச்சியாக திராவிட முன்னேற்றக் கழக அரசின் தற்போதைய முதல்வர் TAPS தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் அறிவித்து சிறப்பு சேர்த்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு SCA பெஸ்ட் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் பேராசிரியர்கள் கூட்டமைப்பின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வந்தார்... சென்றார்...அமித்ஷா!

பாஜகவின் அரசியல் 'சாணக்கியர்', 'ராஜதந்திரி' என்றெல்லாம் சொல்லப்பட்ட அமித்ஷா தமிழகம் வருகிறார் என்றால், சும்மாவா? தொகுதிகளின் பங்கீடு முடிந்துவிடும், யார் யாருக்கு எத்தனை தொகுதிகள், எந்தெந்த தொகுதிகள் என்றெல்லாம் முடிவுக்கு வந்துவிடும் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்டிஏ வின் அதிமுக-பாஜக கூட்டணியினர்.

அமித்ஷாவும் தன் அதிகாரத்தைச் செலுத்தி எடப்பாடி பழனிச்சாமியைத் தன் கிடுக்கிப் பிடியில் கொண்டுவந்து 50 தொகுதிகளை பாஜகவுக்கு வாங்கிவிட்டுத்தான் டில்லி திரும்ப வேண்டும் என்றுதான் அமித்ஷாவும் வந்திருப்பார்.

ஆனால் என்ன செய்ய? பெய்த மழையில் கோலம் அழிந்துவிட்டது. வந்தவேகத்தில் திரும்பிவிட்டார் அமித்ஷா. அப்படியானால் என்ன நடந்தது?

தேர்தலுக்கு இரண்டு மாதங்களே இருக்கும் நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் தொகுதி உடன்பாடு செய்ய வேண்டிய எடப்பாடி, அமித்ஷாவைச் சந்திக்கவோ, பேசவோ மறுத்துவிட்டார்.

பாஜகவுக்கு 50 தொகுதிகள் கொடுத்தாக வேண்டும். அதில் அதிமுக செல்வாக்குள்ள தொகுதிகளும் அடங்கும். பிறரிந்து சென்ற ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன் ஆகியோரைக் கூட்டணியில் கொண்டுவர வேண்டும். தேமுதிக, பாமக போன்ற கட்சிகளுடன் சில (உதிரிக்) கட்சிகளையும் என்டிஏ கூட்டணிக்குள் கொண்டுவந்து இதைமெகா கூட்டணியாகக் காட்ட வேண்டும் போன்ற நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளைப் போட்டால் எடப்பாடிக்குக் கோபம் வராதா என்ன? அதுதான் எடப்பாடி அமித்ஷாவைப் புறக்கணித்து வேலுமணியை அனுப்பி விட்டார். வேலுமணியிடம் என்ன பேச? அவரைத் திருப்பி அனுப்பிவிட்டு டில்லிக்குப் புறப்பட்டார் அமித்ஷா!

டி.டி.வி.தினகரன் திமுகவைவிட எடப்பாடியைத்தான் முதல் எதிரியாகக் கருதுகிறார். ஓபிஎஸ் கடிகாரத்தின் பென்டுலமா இருக்கிறாரே ஒழிய வேறொன்றும் அவரால் முடியவில்லை. தைலாவரத்தில் இன்னும் சமாதானத்தின் அறிகுறி தெரியவில்லை.

தேமுதிக தடுமாறிக் கொண்டு இருக்கிறது, எந்தப்பக்கம் போகலாம் என்று. ஆனால் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி அன்று தொடங்கி இன்றுவரையும் உறுதியாகக் இருக்கிறார்கள்.

புதுக்கோட்டையில் அமித்ஷா சொல்கிறார், "மோடியின் ஆட்சியை மக்கள் விரும்புகிறார்கள்.. என்டிஏ கூட்டணி பெரும்பான்மையுடன் இங்கு ஆட்சியமைக்கும்".

எடப்பாடி சொல்கிறார், "அதிமுக 200 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும்".

மக்கள் என்ன சொல்கிறார்கள், "தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தொடர்கிறார், தொடர்ந்து கொண்டுதான் இருப்பார், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!".

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



## நெல்லை கருத்தரங்கம்



நெல்லை மாவட்டப் பேரவை சார்பில் "காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு" நூல் அறிமுக விழா மாவட்டச் செயலாளர் இரா.சந்தானம் தலைமையில் தோழர்கள் தீபன், பிரவீன், மாரியப்பன், சீதாராமன் முன்னிலையில் 27.12.2025 அன்று நடைபெற்றது. துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து வரவேற்றார். தி.மு.க இளைஞரணி மாநில துணைச் செயலாளர் இன்பா ரகு தொடக்கவுரை ஆற்றினார். தலைவர் சுப.வீரபாண்டியன், தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் மதுரை பாலா,தி.மு.கசெய்திதொடர்புமாநிலதுணைச்செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நூல் அறிமுக உரையாற்றினர். பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொருளாளர் செல்வின் கருத்துரையாற்றினர். மாவட்டத் தலைவர் நெல்லை பாபு தொகுப்புரை வழங்கினார். தி.ந.க மாவட்டத் தலைவர் ஆ.செல்லப்பா நன்றி கூறினார்

## நெல்லையில் மேடைப் பேச்சு



பேரவைத் தகவல் தொழில்நுட்ப அணிச் சார்பில் பாளையங்கோட்டையில் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொருளாளர் செல்வின் சௌந்தர்ராஜன், துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம. வைரமுத்து ஆகியோரின் முன்னிலையில் மேடைப் பேச்சு பயிற்சி வகுப்பு 27.12..2025 அன்று நடைபெற்றது. தலைவர் சுப.வீரபாண்டியன் வகுப்பை நடத்தினார். தகவல் தொழில்நுட்ப அணி மாநிலச் செயலாளர் பிரவீன் வரவேற்றார். தென்காசி மாவட்ட அமைப்பாளர் மணியம்மை தொகுப்புரை வழங்கினார். மாநில துணைச் செயலாளர் ரூபஸ் நன்றி கூறினார். சதக்கதுல்லா அப்பா கல்லூரி செயற்குழு உறுப்பினர் எல்.கே.எம்.ஏ.நவாப் உசேன், மாவட்டத் தலைவர் நெல்லை பாபு, மாவட்டச் செயலாளர் சந்தானம், தி.ந.க மாவட்டச் செயலாளர் மாரியப்பன், கடலூர் மாவட்ட அமைப்பாளர் பெவின், சென்னை தோழர் முத்துக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

## தென்காசியில் அரசியல் கற்போம்





தென்காசி மாவட்டப் பேரவை சார்பில் "அரசியல் கற்போம்"முழு நாள் அரசியல் பயிற்சிப் பட்டறை 28.12.2025 அன்று நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அருள் ஜோதி பாபா தொடக்கவுரை ஆற்றினார்.துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து நோக்கவுரை ஆற்றினார். தலைவர் சுப.வீரபாண்டியன், பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொருளாளர் செல்வின் சௌந்தர்ராஜன், தி.மு.க மாவட்டச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா மற்றும் வே.ஜெயபாலன், தி.மு.க மருத்துவரணி மாநிலத்துணைச்செயலாளர் கலை.கதிரவன்,பேராசிரியர் ஆ.திருநீலகண்டன், பேரவை தகவல் தொழில்நுட்ப அணி மாநிலச் செயலாளர் பிரவீன் உள்ளிட்டோர் சிறப்புரை ஆற்றினர். மாணவர் பேரவை மாவட்ட அமைப்பாளர் டாரீஸ் ஜிந்தகி தொகுப்புரை ஆற்றினார். தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் ரூபஸ் நன்றி கூறினார்



**அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டுப் பொங்கல் வாழ்த்துகள்!**